**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கோட்டை**

**முன்னிலை – திரு.கே.என்.குரு, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, செங்கோட்டை

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண்.18/2024**

**(CNR.No.TNTS11-001557-2024)**

1. வேம்பு அம்மாள்
2. மாரியம்மாள்
3. வடிவேல் முருகன்
4. காளியம்மாள் ... வாதிகள்

/ எதிர் /

1. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
   செங்கோட்டை
2. தமிழ்நாடு அரசு அதன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
   தென்காசி.

... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் 18.03.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.முத்து, அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.ரகுமான் சாதத், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, 20.10.1997 அன்று இறந்துபோன முத்தையா முதலியாரின் சட்டப்பூர்வ வாரிசுகள் வாதிகள் தான் என விளம்புகை செய்தும்; அதன் அடிப்படையில் வாரிசுச் சான்றிதழ் வழங்கிட 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பிறப்பித்தும்; வழக்கின் செலவுத் தொகையை 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்குப் பெற்றுத் தர வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வழக்குரையின் சுருக்கம்</u>** :-

1-ம் வாதியின் கணவரான லேட். முத்தையா முதலியார் என்பவர் கடந்த 20.10.1997 அன்று கட்டளைக்குடியிருப்பில் வசித்து வந்தபோது உடல்நலக் குறைவினால் இயற்கை எய்தினார். மேற்படி முத்தையா முதலியார், சுமார் 55 ஆண்டுகளுக்கு முன்பாக குத்தாலம் என்பவரை முதல் திருமணம் செய்திருந்தார். அவர்களுக்கு 4-ம் வாதி பிறந்தார். இந்நிலையில், முத்தையா முதலியாரின் முதல் மனைவி குத்தாலம் கடந்த 1982-ல் காலமானார். தனது குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், பராமரிப்புத் தேவையினாலுமே முத்தையா முதலியார் கடந்த 1987-ம் ஆண்டு 1-ம் வாதியை சட்டப்பூர்வமாக மறுமணம் செய்துகொண்டார். இத்திருமணத்தின் வாயிலாக 2 மற்றும் 3-ம் வாதிகள் பிறந்தனர். முத்தையா முதலியாரின் பெற்றோர்களான பொன்னம்மாள் (1990) மற்றும் அங்கப்ப முதலியார் (1992) ஆகியோர் ஏற்கனவே காலமான நிலையில், வாதிகள் 1 முதல் 4 வரை உள்ள நபர்களே லேட். முத்தையா முதலியாரின் வாரிசுகள் ஆவர். குடும்பத்தின் வாழ்வாதாரமாக இருந்த முத்தையா முதலியார் மறைவிற்குப் பின், 1-ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி 1-ம் பிரதிவாதியான செங்கோட்டை வட்டாட்சியரிடம் முறைப்படி மனு அளித்தார். ஆனால், 1-ம் பிரதிவாதி முறையான விசாரணை மேற்கொள்ளாமல், முத்தையா முதலியாருக்கு இரண்டு மனைவிகள் என்ற காரணத்தைக் காட்டி 1-ம் வாதியின்

மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். தற்போது 1–ம் வாதி கணவரை இழந்த விதவை என்ற நிலையில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கும், இதர நிர்வாகத் தேவைகளுக்கும் வாரிசு சான்றிதழ் அவசியமான ஒன்றாக உள்ளது. எனவே, வாதிகள் அனைவரும் லேட். முத்தையா முதலியாரின் சட்டப்பூர்வ வாரிசுகள் என விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் வழங்கிட 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளுக்கு உரிய செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :–

வாதிகளின் வழக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்ககூடியதில்லை. வாதிகளின் தகப்பனாரான முத்தையா முதலியார் அவர்களுக்கும் வாதிகளின் தாயார் வேம்பு அம்மாள் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதையும் திருமணத்தின் பயனாக மாரியம்மாள், வடிவேல் முருகன், வாரிசுகளாக பிறந்தார்கள் என்பதையும் மேற்படி லேட்.முத்தையா முதலியாரின் தகப்பனார் அங்கப்ப முதலியார் மற்றும் அவரது தாயார் பொன்னம்மாள் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்பதையும் வாதிகளே நிரூபித்து போக கடமைப்பட்டவர்கள். வாதிகள் வாரிசு சான்றிதழ் வேண்டி SOP மனுவாக தாக்கல் செய்யாமல் வழக்காக தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்கக்கூடியதில்லை. எனவே வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும்.

**4.** இவ்வழக்கில் வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு தீர்முடிவினை எட்ட வழக்கு விசாரணையின் பொருட்டு கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. Whether the plaintiffs are enttield to the relief of the Declaration that they are the legal heirs of the deceased Muthaiah?

2. Whether the plaintiffs are enttield for the relief of the Mandatory Injunction direct in the 1st and 2nd defendant to issue a legal heirs certificate?

3. To what other reliefs the parties are entitled to?

5. இவ்வழக்கில், வாதிகள் தரப்பில் வழக்கை நிரூபிக்கும்பொருட்டு, வா.சா.1 விசாரிக்கப்பட்டு அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>எழுவினா 1 முதல் 3 ற்கான தீர்வு :–</u>

i) இவ்வழக்கில், இறந்துபோன முத்தையா முதலியார் என்பவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என வாதிகள் கூறுவது சரிதானா? என்பது குறித்து வழக்கில் உள்ள ஆவணங்களை பரிசீலிக்கும்போது, இறந்துபோன முத்தையா முதலியார் என்பவரும் அவருடைய வாரிசாகக் கூறப்படும் இவ்வழக்கு வாதிகளும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதை வழக்கு ஆவணங்கள் உறுதிப்படுத்துகிறது. ஆதலால், மேற்படியார்களுக்கு இந்து வாரிசுரிமைச் சட்ட விதிமுறைகள் பொருந்தக்கூடியதாகும்.

ii)வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், முத்தையா முதலியாரின் முதல் மனைவி குத்தாலம் 1982–லேயே இறந்துவிட்டார். அதன் பிறகு 1987–ல் தான் அவர் 1–ம் வாதியை சட்டப்படி மறுமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத்தின் மூலம் பிறந்த பிள்ளைகளும், முதல் மனைவிக்குப் பிறந்த 4–ம் வாதியும் தான் முத்தையா முதலியாரின்

உண்மையான வாரிசுகள். ஆனால், வட்டாட்சியர் முறையான விசாரணை நடத்தாமல், இரண்டு மனைவிகள் என்ற காரணத்தைச் சொல்லி வாரிசு சான்றிதழ் தர மறுத்தது சட்டப்படி தவறானது. 1–ம் வாதி ஒரு விதவை என்ற நிலையில், அரசின் நலத்திட்டங்களைப் பெற இந்தச் சான்றிதழ் மிகவும் அவசியமாக உள்ளது. எனவே, வாதிகள் 1 முதல் 4 வரை உள்ள நபர்களே லேட். முத்தையா முதலியாரின் உண்மையான சட்டப்பூர்வ வாரிசுகள் என விளம்புகை செய்யவும், வாரிசுச் சான்றிதழ் வழங்க பிரதிவாதிக்குச் எதிராக செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்கவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வாதிட்டார்.

iii) 1, 2–ம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வாதிகளின் இந்த வழக்கு உண்மையில்லை மற்றும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், முத்தையா முதலியாரின் முதல் மனைவி மறைவுக்குப் பிறகுதான் 1–ம் வாதியைத் திருமணம் செய்தார் என்பதையும், அதன் மூலம் மற்ற வாதிகள் பிறந்தனர் என்பதையும் வாதிகளே முறையான ஆதாரங்களுடன் நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். அதேபோல், முத்தையா முதலியாரின் பெற்றோர் இறப்பு குறித்த தகவல்களையும் வாதிகளே மெய்ப்பிக்க வேண்டும். வாரிசு சான்றிதழ் பெற அரசு வகுத்துள்ள உரிய SOP நடைமுறைகளைப் பின்பற்றாமல், நேரடியாக இந்த உரிமையியல் வழக்கைத் தாக்கல் செய்தது நடைமுறைக்கு மாறானது. எனவே, போதிய ஆதாரங்களும் சட்ட நடைமுறையும் இல்லாத இந்த வழக்கினைப் பிரதிவாதிகளைப் பொறுத்துத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

iv) இவ்வழக்கில் இறந்துபோன முத்தையா முதலியார் என்பவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என கண்டுள்ள வழக்குரை சங்கதிகளை அனுசரித்து இவ்வழக்கின் 1–ம் வாதி வா.சா.1 ஆகத் தன்னுடைய முதல் விசாரணை உறுதிக்கூற்றினைத் தாக்கல் செய்துள்ளார். வா.சா.1 தன்னுடைய

குறுக்கு விசாரணையில், **" இறந்துபோன முத்தையா முதலியார் தனது கணவர் என்றும், குத்தாலம் தனது கணவரின் முதல் தாரம் என்றும், குத்தாலம் 1982 ம் ஆண்டு இறந்துவிட்டதாகவும், தனக்கும் முத்தையா முதலியாருக்கும் திருமணம் நடைபெற்று 37 ஆண்டுகளாகிறது. குத்தாலத்திற்கும், முத்தையா முதலியாருக்கும் பிறந்த குழந்தை தான் 4 ம் வாதி என்றால் சரிதான். தனக்கும் முத்தையா முதலியாருக்கும் பிறந்த வாரிசுகள் 2, 3 வாதிகள் என்றால் சரிதான். முத்தையா முதலியாரின் தந்தை பெயர் அங்கப்ப முதலியார், தாயார் பெயர் பொன்னம்மாள், அவர்கள் இருவரும் காலம் சென்று விட்டதாகவும்"** சாட்சியமளித்துள்ளார்.

v) இருதரப்பு வாதங்களும் மற்றும் வழக்கிலுள்ள ஆவணங்களும் நன்கு பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.2–ன் படி லேட். முத்தையா முதலியாரின் இறப்பு சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படுகிறது. வா.சா.1 தனது சாட்சியத்தில், முத்தையா முதலியாரின் முதல் மனைவி குத்தாலம் கடந்த 1982–ல் மறைந்த பின்னரே, 1–ம் வாதியின் திருமணம் 1987–ல் சட்டப்படி நடந்ததாகத் தெளிவாகக் கூறியுள்ளார். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆதார் அடையாள அட்டைகள் (வா.சா.ஆ.1), அவர்கள் முத்தையா முதலியாரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வாரிசுகள் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

vi) பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் SOP நடைமுறையைப் பின்பற்றி இருக்க வேண்டும் என வாதிட்டாலும், ஒரு நபரின் வாரிசுரிமை குறித்த சட்டப்பூர்வ அந்தஸ்தை விளம்புகை செய்ய உரிமையியல் நீதிமன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு என இந்நீதிமன்றம் கருதுகிறது. 1–ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்ட விபரங்கள் (வா.சா.ஆ.3 மற்றும் 4) மூலம், வட்டாட்சியர் முறையான கள ஆய்வின்றி மனுவை நிராகரித்தது தெளிவாகிறது. வாதிகளின் வாரிசுப் பட்டியலைத் தவறு என நிரூபிக்கவோ அல்லது வேறு வாரிசுகள் உள்ளனர் என்பதைக் காட்டவோ

பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, கடந்த 20.10.1997 அன்று காலமான முத்தையா முதலியார் என்பவருக்கு, வாதிகள் 1 முதல் 4 ஆகியோரே சட்டப்பூர்வமான வாரிசுகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக**, இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, கடந்த 20.10.1997-ம் தேதியன்று இறந்துபோன முத்தையா முதலியார் என்பவருக்கு இவ்வழக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்தும், அதன் அடிப்படையில் அவர்களுக்கு வாரிசுச் சான்றிதழ் வழங்கிட 1 மற்றும் 2-ம் பிரதிவாதிகள் மீது செயலுறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, **2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாளான இன்று** இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

GURU Digitally signed by GURU
Date: 2026.03.30
18:24:45 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :-**

வா.சா.1 .. திருமதி. வேம்பு அம்மாள் (1ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| ஆவண எண். | நாள் | சான்றாவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | வாதிகளின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளிப்பட நகல்) |
| வா.சா.ஆ.2 | 05.11.1997 | லேட்.முத்தையா முதலியாரின் இறப்பு சான்றின் ஒளி நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | -- | 1ம் வாதி 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனுவின் நகல். |
| வா.சா.ஆ.4 | -- | வாரிசு சான்று கேட்டு தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஸ்டேட்டஸ் ஒளி நகல். |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

– இல்லை –

GURU Digitally signed by GURU
Date: 2026.03.30
18:25:00 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**செங்கோட்டை**

மா.உ.நீதிமன்றம், செங்கோட்டை
அசல் வழக்கு எண்.18/2024
**தீர்ப்புரை** (Draft / Fair)
நாள் : 30.03.2026